www.nilafrance.com

# நிலா

இது ஓர்
இலவச வெளியீடு
(மூவாயிரம் பிரதிகள்)

புரட்டாதி - ஐப்பசி 2011 | இது கிருஷ்ணா அச்சகத்தின் ஓர் விளம்பர வெளியீடு | இல. 11




## பிரான்சில் நடந்து முடிந்த
# செனெற் சபைத் தேர்தல், இடதுசாரிகளுக்கு முதல் வெற்றி

பிரான்சில் நடந்து முடிந்த செனெற் சபைத் தேர்தலில், முதன்முறையாக இடதுசாரிக்கட்சிகள் வெற்றி பெற்றுள்ளன. வலதுசாரிகள் வரலாற்றுத் தோல்வியைத் தழுவியுள்ளனர். பிரான்சில் இப்போதுள்ள ஐந்தாவது குடியரசு வரை நடைபெற்ற மேல்சபை (செனெற் சபை – Le Sénart) தேர்தல்களில் வலதுசாரிகளே வெற்றி பெற்று வந்திருக்கின்றனர். ஆனால், கடந்த செப்ரெம்பர் 25 இல் இடம்பெற்ற தேர்தலில், 348 ஆசனங்களில், வலதுசாரிகளில் ஆளுங்கட்சியான UMP, 146 ஆசனங்களையும், எதிர்கட்சியான PS, 122 ஆசனங்களையும் பெற்றிருந்தன. மிகுதி ஆசனங்களை இதர வலது, இடதுசாரிக் கட்சிகள் பெற்றிருந்தன. கூட்டிப்பார்த்தால் இடதுசாரிகள் கொண்டது 174 ஆசனங்கள். வலதுசாரிகள் கொண்டது 171 ஆசனங்கள்.

«நாம் குடியரசுத் தேர்தலில் கூடத் தோற்றாலும் மேல்சபைத்தேர்தலில் தோற்கமாட்டோம்» என்றே மார்தட்டி வந்த வலதுசாரிக்கட்சிகள் இத்தேர்தலில் தோற்றாலும் மேல்சபைத் தலைவராக 30 - 09 - 2011 வரை தலைவராக இருந்த Gérard Larcher ஐ வெற்றிபெற வைக்க செய்த பிரயத்தனங்கள் எல்லாம் கைகூடவில்லை.

01- 10 - 2011 இரவுவரை நடந்த மேல் சபைத் தலைவரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பில் சோஷலிஸக் கட்சி வேட்பாளரான Jean-Pierre Bel - 177 வாக்குகள் பெற்று முதலாவது இடதுசாரி கட்சியின் தலைவராக ஆனார். இவர் பெற்ற ஆசனங்கள் 177. UMP வேட்பாளரான லார்சே பெற்ற ஆசனங்கள் 170. செனெற் சபை லக்ஸம்பேர்க் மாளிகையில் அமைந்துள்ளது. இத்தேர்தல் தோல்வியின் விளைவாக விளையாட்டுத்துறை அமைச்சரில் மாற்றம் ஏற்பட்டது. இத்தேர்தலிலும் சோஷலிஸக்கட்சி வெற்றி வாகை சூடியதனால் அடுத்த ஆண்டு நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலிலும் இக்கட்சியே வெற்றிபெறும் என சூசகமாக நம்பப் படுகிறது. ஆனாலும் வாக்குப் போடும் முடிவை கடைசித் தருணத்தில்தான் பிரெஞ்சியர்கள் எடுப்பார்கள் எனும் ஐதீகமும் உலவுகிறது.

(எஸ்.எஸ்)




RATP

# போக்குவரத்து பாதுகாப்பில் 20ஆயிரம் கமராக்கள்!

1998இலிருந்து 50மில்லியன் யூரோக்கள் போக்குவரத்து பாதுகாப்பு சேவைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாக பிரான்சின் உள்துறை அமைச்சர் தெரிவிக்கிறார். இருந்தும் 58வீதத்திற்கும் மேற்பட்ட பிரான்ஸ் மக்கள் தமக்கு போக்குவரத்தில் பாதுகாப்பில்லை என கருதுகின்றனர்.

தற்போது 20ஆயிரம் கமராக்கள் போக்குவரத்து சேவையுள் பொருத்தப்பட்டுள்ளன. மேலும், 900 பேர் புதிதாக பாதுகாப்புச்சேவைக்கென நியமிக்கப்பட்டுமுள்ளனர்.

(MM)




# கிருஷ்ணா அச்சகம்

## தரம் - குறித்த தவணை - நியாயவிலை

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும்,
மொழிபெயர்ப்பு தேவைகளுக்கும் நாடுங்கள்!

☎: 01 42 51 29 92 Fax : 01 42 51 35 25

E-mail: krishnafrance@yahoo.com






பிரான்ஸ் தனது பாரம்பரிய உணவு முறைகளினால் பெருமை பெற்றிருந்தது. ஆனால் நவ காலனித்துவ துரித உணவகங்களின் படையெடுப்பால் தனது பெருமை மிக்க உணவு வழக்கங்களை இழந்து வருகின்றது. மாவும் பாற் கட்டியும் சேர்த்து தயாரிக்கப்படுகின்ற Le Cordon Bleu என்ற பிரெஞ்சு உணவு நாடு முழுவதும் முக்கியத்துவம் பெற்றது. தங்கள் தாய் நிலத்தையே Le Cordon Bleu என அழைக்கின்ற அளவுக்கு தங்கள் பாரம்பரிய உணவிற்கு முன்னுரிமை கொடுக்கின்றனர்.

ஆனால் மக்டோனால்ட் (Mcdonald's) குயிக் (Quick), சப்வே (Subway) போன்ற பிற நாட்டு துரித உணவகங்கள் தங்கள் வாழ்க்கை முறையை மாற்றியமைப்பதாக பிரெஞ்சு மக்கள் கவலை கொள்கின்றனர். இவ் உணவகங்களில் சாப்பிடுவோர் எடை அளவுக்கு மீறி கூடி வருகின்றது. பிரான்ஸில் 10 வருடங்களின் முன்னர் 8% மான பிரெஞ்சுக்காரர் உடல் பருமன் கூடியவர்களாக இருந்தார்கள். ஆனால் தற்போது 14% மானோர் எடை கூடியவர்களாக உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இப் பிரச்சனை வயது குறைந்தோரிடையேயே மிகவும் அதிகமாக காணப்படுகின்றது. புள்ளி விபரங்களின் படி "மக்டோனால்ட்" உணவுகளை சாப்பிடுபவர்கள் பட்டியலில் பிரெஞ்சுக்காரர்கள் இரண்டாம் இடத்தில் இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன,

இளம் வயதினர் வழமையான பிரெஞ்சு உணவுகளைத் தவிர்த்து துரித உணவகங்களை நாடுவதால் அவர்கள் சமையல் கலையையும் கற்க ஆர்வம் இன்றி இருக்கின்றனர்.

இதற்கிடையில் மக்டோனால்ட் போன்ற பூதங்கள் பிரெஞ்சு பாரம்பரிய உணவுகளுடன் இணைந்த உணவுகளை தயாரிக்க இருப்பதாக அறிவிக்கின்றது. இதன் மூலம் பிரான்ஸை உலகின் தங்கள் இரண்டாவது வருமானம் மிக்க நாடாகவும் தக்கவைக்க அவை முயல்கின்றன.

(YB)

## 10 யூரோ நாணயம்

பாரிஸில் முதன் முறையாக 10 யூரோ நாணயம் புழக்கத்திற்கு வருகிறது. 30 மில்லியன் யூரோக்கள் பெறுமதியான 3 மில்லியன் பிரதிகள் அச்சிடப்படுகின்றன. இதனை விற்பனை செய்வதற்கு சுமார் 3000 தபால் நிலையங்கள் தயாராகின்றன.

நடைமுறையில் 10 யூரோ தாள்காசுடன் ஒப்பிடுகையில் இந் நாணயம் ஆயுதங்கள் மற்றும் பிரெஞ்சுக்குப் பெருமை சேர்க்கக் கூடிய தளங்கள், நினைவிடங்கள் என்பன உள்ளடக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. நாணயத்தின் பின்



பக்கத்தில் ஈபிள் கோபுரம் (la tour Eiffel), Versailles அரண்மனை (le château de Versailles), Saint – Michel மலை (le Mont-Saint-Michel) அல்லது Lascaux குகை என்பன உள்ளடக்கியுள்ளது.

(RS)

## பொலிசாரை துன்புறுத்திய 16வயது பள்ளிமாணவி

### 9788 தடவைகள் அவசர அழைப்பு விடுத்தார்!

மோ(Meaux) என்ற இடத்திலிருக்கும் 16 வயது நிரம்பிய பள்ளி மாணவி அண்ணளவாக 9788 தடவைகள் பொலிசாரின் அவசர உதவி இலக்கத்திற்கு தொலைபேசி அழைப்பு விடுத்துள்ளார். தான் பிரச்சனைகளால் சிரமப்படுவதாக அழைப்பு விடுத்த இவர் பொலிசாரை தொடர்ந்து துன்புறுத்தியதாகவும் பகைமை உணர்வுடன் பொலிசாருடன் தொடர்பு கொண்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளர். தனது தாயாரின் கைத்தொலை பேசியிலிருந்து 17 என்ற இலக்கத்திற்கு அழைக்கப்பட்ட இவ் அழைப்புகள் ஏப்ரல் 1 முதலாம் திகதியிலிருந்து பதிவு செய்யப்பட்டுள்ளன.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ள இவருடைய நடவடிக்கைக்கு ஒருவருட சிறைத் தண்டனையும் 15000 யூரோக்கள் தண்டமும் செலுத்த நேரலாம் என சட்டவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

(YB)

சிரிக்காமல் கழிக்கப்பட்ட நாள் இழக்கப்பட்ட நாள்.
– பிரெஞ்சுப்பழமொழி

**சங்கீதா அச்சகம்**
லாச்சப்பல்

## சாரதி அனுமதி பத்திரமின்றி வாகனம் ஓட்டிய 83 வயதுப்பெண் கைது!



வாகனம் ஓட்டுபவர்கள் அனுமதி பத்திரமின்றி வாகனம் ஓட்டுவது தவறான விடயமாகும். Sucy-en -Brie பகுதியில் 83 வயது நிறைந்த பெண்மணி ஒருவர் சாரதிப் பத்திரம் இன்றி வாகனம் ஓட்டிவந்துள்ளார். இவரை வழிமறித்த போக்குவரத்து கண்காணிப்பு பொலிஸ் சட்டத்திற்கு புறம்பான முறையில் வாகனம் ஓட்டி வந்ததை சுட்டிக்காட்டி அவருக்கு சிறைத்தண்டனை விதித்ததுடன் அவரது வாகனத்தையும் பறிமுதல் செய்துள்ளது. இவ்வாறு சட்ட விரோதமான முறையில் அனுமதிப் பத்திரமின்றி வாகனம் செலுத்துபவர்களிற்கு இச்செயல் ஓர் எச்சரிக்கையாய் அமைகிறது.

(SJ)




# சுய நிர்ணய உரிமை கோரும் நூவெல் கலிடோனியா

பாரிசில் இருந்து 17000 கிலோமீற்றர் தூரத்திலிருக்கிறது நூவல் கலிடோ - னியா தீவு. அந்தத்தீவின் பாரம்பரிய பழங்குடிமக்களுக்கும் பிரெஞ்சு அரசுக்கும் நீண்டகாலமாகவே தீர்க்கப்படாத பிரச்சினைகள் இருந்து வருகின்றன.

இத் தீவுகளில் அலுமினியம், நிக்கல் உலோகங்கள் பெருமளவில் காணப் படுகின்றன. இந்த வளங்களில் கண் வைத்திருக்கும் பிரெஞ்சு அரசு ஆதிவாழ் மக்களை சிறுபான்மையாக்கி அவர்களின் வளங்களை சுரண்டி வருவதாக உள்ளூர் வாசிகள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து போராடி வருகின்றனர்.

நூவெல் கலிடோனிய ஆதிவாழ் மக்களுக்கும் பிரான்ஸ் அரசுக்கும் இடையில் முரண்பாடுகளைக் குறைக்கும் வண்ணம் அண்மையில் (28.8.2011 இல்) அங்கு விஜயம் செய்த பிரெஞ்சு ஜனாதிபதி மூன்று நாட்கள் அங்கு தங்கி பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டார். 1980ம் ஆண்டுகளில் ஆரம்பித்த பிரான்ஸ் எதிர்ப்புப் போராட்டங்கள் பிரான்சுக்கு பெரும் நெருக்கடியை கொடுத்திருந்தது. தொடர்ந்து நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் பின்னர் 1988 இல் நூவெல் கலிடோனியாவின் தலைநகர் நுமேஆ (Nouméa) இல் சுய நிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பு நடாத்துவதென முடிவெடுக்கப்பட்டது. ஆனால் 1980 இல் கிளர்ந்தெழுந்த போராட்டம், ஒப்பந்தங்கள் நேர்மையாக கடைப் பிடிக்காமையினால், எந்தவிதமான தீர்வையும் இதுவரை அந்த மக்களுக்கு வழங்கிவிடவில்லை. தற்போது 2014-2018 ஆண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் சுயநிர்ணய உரிமைக் கான அபிப்பிராய வாக்கெடுப்பு நடைபெற உள்ளதாக தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இத்தீவில் இரண்டரை இலட்சம் (245000) மக்கள் வாழ்கின்றார்கள். தற்போது ஐரோப்பியர்களின் எண்ணிக்கை 50வீதமாக உயர்ந்துள்ளது. உள்ளூர் மக்களான கனக்கே (Kanake) மக்களே இப்போராட்டத்தை தலைமை ஏற்று நடத்துகின்றனர். இவர்கள் 28 உள்ளூர் மொழிகளை பேசுபவர்களாக உள்ளனர். இவர்களுள் 1வீதமானோர் தமிழ் மக்களின் வழித் தோன்றல்கள் என்பதும் ஒரு புதியசெய்திதான். (YB)

## RSA


பிரான்சின் பொருளாதாரம் சரியத்தொடங்கியபின் வரிகள் மற்றும் சலுகைகளில் கைவைக்கத் தொடங்கிய அரசு இப்போ சமூகநலக் கொடுப்பனவுகளிலும் இறுக்கத்தை கடைப்பிடிக்க தொடங்குகிறது. அதாவது RSA உதவித்தொகை பெறுவோரை வாரத்தில் ஓர் ஏழுமணி நேரவேலைக்கு நிர்ப்பந்திக்கிறது.




உடற் தகுதியுள்ளோர் கட்டாயப்படுத்தப்படுவர். மறுப்போர் தண்டிக்கப் படலாம். பிரான்சில் 1.87 மில்லியன் குடும்பத்தினர் RSA உதவித்தொகை பெறுவதாக அவர்களது மே மாத அறிக்கை தெரிவிக்கிறது. (MM)


## ரூபி அச்சகம்

**உங்கள் மழலைகளின் வண்ண வண்ண போஸ்ரர்கள், மற்றும் உங்கள் வர்த்தக ஸ்தாபனங்களுக்குரிய போஸ்ரர்களை பதிப்பித்துக்கொள்ள எம்மை நாடுங்கள் !**




**10, RUE LABAT- PARIS 18**
M°: Marcadet Poissonniers
*Tél.: 01 42 51 80 78*

## புதிய வயலின் வகுப்புகள் ஆரம்பமாகின்றன!



# 'நாதாலயம்'

**ஆசிரியர் : தேவராஜா மயில்வாகனம்**

**தொடர்புகளுக்கு : 01 39 86 04 84 / 06 85 14 92 15**

E-mail : mylthe@wanadoo.fr




சீனாவின் சங்காய் (Shanghai) பல்கலைக்கழகம் 2003ம் ஆண்டில் இருந்து உலகெங்கும் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் தராதரத்தை ஆராய்ந்து பட்டியலிட்டு வருகிறது. இந்த ஆண்டு பட்டியலிடப்பட்ட 500 கல்வி நிறுவனங்களுள் பிரான்ஸ் 8வது இடத்தில் உள்ளது.

உலகம் முழுவதும் புதிய புதிய தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்படுகின்ற சூழ்நிலையில் கற்பித்தல் பின்தள்ளப்பட்டு ஆராய்ச்சிப் பணிகள் (Labo Rechereche) தரப்படுத்தலில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக சில உயர்கல்வி நிறுவனங்கள் தரப்படுத்தலில் பின்னடைவை சந்தித்துள்ளன.


தரமிக்க முதல் 100 கல்வி நிறுவனங்களில் பிரான்சின் மூன்று பல்கலைக்கழகங்கள் இடம்பிடித்துள்ளன. அவை 40ஆம், 41ஆம் மற்றும் 69ஆம் இடங்களில் உள்ளன. இவை பாரிஸ் - ஒர்சே தெற்கு (Paris - Sud - Orsay), பியர் - மேரி கியூரி பாரிஸ் (Pierre et Marie Curie), மற்றும் எக்கோல் நோர்மல் சுப்பீரியர் (Ecole Normal Supérieur - ULM) என்பனவாகும்.

உலகின் முதல்தர 500 கல்வி நிறுவனங்களில் அமெரிக்கா 151 இடங்களைப் பெற்று முதல் இடத்தில் உள்ளது. இப்பட்டியலின்படி அமெரிக்காவின் ஹெவாட் (Havard) பல்கலைக்கழகம் முதலாம் இடத்தில் உள்ளது.

ஜேர்மனி 39 இடங்களைப் பெற்று 2ம் இடத்திலும், 38 இடங்களைப் பெற்று இங்கிலாந்து 3ம் இடத்திலும், 35 இடங்களைப் பெற்று சீனா 4ம் இடத்திலும், 23 இடங்களைப் பெற்று ஜப்பான் 5ம் இடத்திலும் உள்ளது.

22 இடங்களைப் பெற்று கனடாவும், இத்தாலியும் 6ம் இடத்திலும் உள்ளன. 2009ம் ஆண்டில் 5ம் இடத்திலும், 2010ம் ஆண்டு 6ம் இடத்திலும் இருந்த பிரான்ஸ் 2011ம் ஆண்டில் 8வது இடத்தில் உள்ளது.

(YB)



# இது நல்லா இருக்கே!

பாதுகாப்பு காரணத்தை முன்வைத்து முஸ்லிம்பெண்கள், அவர்களது பாரம்பரிய உடையான புர்கா அணிய தடைச்சட்டம் விதித்தது பிரான்ஸ்.

இதற்கு முஸ்லிம் பெண்கள் மத்தியில் கடும் எதிர்ப்பு தொடர்ந்தும் நிலவிவருகின்றது. சட்டத்தை மீறுவோர் குற்றப்பணமும் செலுத்தி வருகின்றனர். பிரான்சில் இந்த அபராதம் தொடர்வதால், முஸ்லிம் தொழிலதிபர் ஒருவர் 10லட்சம் யூரோக்களை வைப்பிலிட்டு ஓர் நிதியமைப்பை உருவாக்கியிருக்கிறார். புர்கா அணிந்து தண்டப்பணம் செலுத்தவேண்டிவரும் முஸ்லிம் பெண்கள் இந்த நிதியிலிருந்து எடுத்து அபராதம் செலுத்தலாம்.

தவறான தரிப்பிடம், மிகைவேகம் என்று கார்க்காரரின் பிரச்சினைக்கும் இப்படி யாராவது நிதியமைப்பொன்றை உருவாக்கினால் என்ன குறைந்தா போவார்கள்? என்று அங்கலாய்க்கிறார் காருக்கு தண்டம் கட்டியே அறுந்துபோன நண்பரொருவர்.

(MM)



# அசையும் - அசையா சொத்துக்களுக்கான 2011இற்கான வரி

## வரி அறவிடப்படக் கூடியவை

சொந்தவீடு - வீடுகள் + கட்டடங்கள் வியாபார முதலீடுகள் + பணம் மற்றும் வீட்டிலுள்ள பெறுமதியான அலுமாரிகள், சமையலறைத் தளபாடங்கள், பியானோ முதலியன.. அசையாச் சொத்துக்களின் பங்குகளும், அநுபோக உரிமைகளும் கணக்கிடப்பட வேண்டும்.

| | |
|---|---|
| 800 000€ இற்குள் | 0% |
| 800 000€ - 1310 000€ | 0,55% |
| 1310000€ - 2570000€ | 0,75% |
| 2570000€ - 4040000€ | 1% |
| 4040000€ - 7710000€ | 1,30% |
| 7710000€ - 16790000€ | 1,65% |
| 16790000€ இற்கு மேல் | 1,80% |

மேலே உள்ள அட்டவணைப்படியும் இன்றைய மதிப்பீட்டின் படியும் கணக்கிட்டு வரும் (VNT) தொகையி லிருந்து தங்கள் பொறுப்பிலிருக்கும் 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு பிள்ளைக்கும், ஊனமுற்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் மற்றும் தங்கள் வீட்டிலிருக்கும் நோயாளி அல்லது வேலைக்குத் தகுதியற்ற ஒவ்வொருவருக்கும் 150யூரோ விகிதம் கணக்கிட்டு இத்தொகையை VNT யிலிருந்து கழித்து வரும் தொகையே கட்டவேண்டிய தொகை..

- மாயவர்



## படித்தது சுவைத்தது

- விஜயரூபன்

ஒரு தாய்
தன் பெண் குழந்தைக்கு
கள்ளிப்பால் கொடுக்க
கள்ளிச்செடியோரம்
சென்று கொண்டிருந்தாள்
அங்கே
ஒரு நாய்
தன் பத்துக்குட்டிகளுக்கு
பால் கொடுத்துக்கொண்டிருந்தது



# பிரெஞ்சு அரசின் நிதிப்பற்றாக்குறையை ஈடுசெய்ய

# விசேடவரி அறவீடு!

பிரான்ஸில் கடந்த இரண்டு வருடங்களாக வரவு - செலவில் 1200 கோடி யூரோக்கள் துண்டு விழு கின்றது. இந்த இடை வெளியைக் குறைக்கும் முகமாக செல்வந்தர்களின் வருமானத்தில் மேலதிகமாக 3% வரி அறவிட அரசு தீர்மானித்துள்ளது.

வருடாந்தம் ஐந்து இலட்சம் (500,000) யூரோக்களுக்கு கூடுதலாக வருமானம் பெறுவோரிடம் இருந்தே மேலதிகமாக 3% வரி அறவிடப்படவுள்ளது. இதன் மூலம் இரண்டு வருடங்களில் 12 பில்லியன் யூரோக்கள் மீதப்படுத்தப் படும் என்று அரசு தெரிவிக்கின்றது.

இதன் காரணமாக சில நிறுவனங்கள் 3% வரியைத் தவிர்ப்பதற்காக நாட்டை விட்டு வெளியேற வாய்ப்புள்ளதாகவும் கணிக்கப்படுகின்றது.

எனினும் இந்த "விசேட வரி செலுத்துதல்" மற்றும் ஒத்துழைத்தல் போன்ற வற்றிற்காக பிரான்ஸின் முதல் 16 பெரிய நிறுவனங்களின் தலைவர்கள் கையொப்பமிட்டு தங்கள் ஆதரவைத் தெரிவித்துள் ளனர்.

ஒப்பம் இட்டவர்களுள் ஐரோப்பாவின் பணக்காரப் பெண்மணியான ஓறெய்ல் (Oréal) நிறுவனங்களின் தலைவரான லிலியன் பெத்தன்கூர் (Liliane Bettencourt) என்பவரும் அடங்குவார்.

எண்ணெய் நிறுவனமான Total, Société Générale வங்கி மற்றும் Air France என்பனவற்றின் தலைவர்களும் ஒப்பமிட்டுள்ளவர்களாவர்.

அரசுக்கு நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டு பிரான்சுக்கும் ஐரோப்பாவிற்கும் கடன் சுமை எதிர்காலத்தை பயமுறுத்துமானால் ஒவ்வொருவரும் விசேட வரி செலுத்தி ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் இவர்கள் கேட்டுள்ளனர்.

(YB)

## ஆப்கானிஸ்தானிலிருந்து பிரெஞ்சுப் படையினர் வெளியேற வேண்டும்!



2001ம் ஆண்டில் இருந்து பிரெஞ்சுப் படையினர் ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ளனர். 2011ம் ஆண்டு ஒகஸ்ற் வரை 74 பிரெஞ்சு வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்களுள் 22 படையினர் 2011ம் ஆண்டில் மாத்திரம் கொல்லப்பட்டுள்ளனர்.

இழப்புக்கள் அதிகமானதாக இருப்பதாலும் பொருளாதார ரீதியாக பிரச்சினைகள் இருப்பதாலும் 2014ம் ஆண்டிற்கு முன்னதாக பிரெஞ்சுப் படையினரை வெளியேற்ற பிரெஞ்சு அரசாங்கம் முடிவெடுத்துள்ளது. காலக்கெடு வரை காத்திராமல் பிரெஞ்சுப் படையினரை "விரைவாக" ஆப்கானிஸ்தானில் இருந்து முற்றாக வெளியேற்ற வேண்டும் என சோசலிசக் கட்சியைச் சேர்ந்த முன்னாள் பிரதமர் லோறன்ஸ் பபியூஸ் (Laurant Fabius) அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

(YB)

## துயர் பகிர்வு



தோற்றம்: 13.02.1958
மறைவு: 31.07.2011
அமரர் முருகையா வரதராஜா



தோற்றம்: 26.02.1961
மறைவு: 05.09.2011
அமரர் மார்க்கண்டு உதயகுமார்



தோற்றம்: 29.12.1966
மறைவு: 08.09.2011
அமரர் பாஸ்கரன் கனகசிங்கம்



தோற்றம்: 19.08.1948
மறைவு: 30.06.2011
அமரர் குமரேசபிள்ளை வீரசிங்கம்




தோற்றம்: 15.08.1915
மறைவு: 30.09.2011
அமரர் சாமுவேல் பெஞ்சமின்




PFT POMPES FUNÈBRES TATY
இறுதிப் பயண ஒழுங்கமைப்பு ஸ்தாபனம்
ORGANISATION DES OBSÈQUES ET CÉRÉMONIES
RAPATRIEMENT DES CORPS TOUTES DESTINATIONS
65, Rue Chapelle, 75018 Paris
M° : Porte de la Chapelle
Tél. 01 40 35 66 58 / 06 98 61 07 62
Fax : 01 40 35 67 18
N° PRÉFET : 1191168
Vous trouverez sur place
Robes - Couronnes de fleurs - Plaques
Chaussettes - Gants - Noeuds - Pochettes
et Autres accessoires
Email :pft.taty@yahoo.fr

# பாரிசிலும் அதன் சுற்றுப்புற நகர்களிலும் மூன்றுலட்சம் மாணவர்கள் போதிய வீட்டு வசதியின்மையால் அவதியுறுகின்றனர்.



3 இலட்சம் மாணவர்கள் 4000 மாணவர்களுக்கான வதிவிட வசதிகளைப் பெற போட்டியிலும் தர்க்கத்திலும் ஈடுபடுகின்றனர்.

கடந்த வருடம் 93 இடங்களிற்காக 4932 விண்ணப்பங்கள் வந்திருந்தன. அத்துடன் 2011ம் ஆண்டில் வாடகை 6வீதத்தினால் கூடியுள்ளது. பாரிஸ் நகர் அதிகூடிய விலையுள்ள நகரமாக தற்போது மாறி வருகின்றது.

பாரிஸ் நகரசபை 2014ம் ஆண்டை இலக்குவைத்து 7800 மாணவர் வதிவிடங்களை மேலதிகமாக உருவாக்க நிதிஒதுக்கி வேலைகளை ஆரம்பித்துள்ளது. முக்கியமாக பாரிஸ் 13இலும் பாரிஸ் 18இலும் கூடுதலான விடுதிகள் கட்டிமுடிக்க திட்டமிடப் பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.அத்துடன் வெளிநாடுகளில் இருந்து கல்விகற்க வருகின்ற மாணவர்களால் கூடுதலான நெருக்கடி ஏற்படுவதாக கூறப்படுகின்றது. மாணவர் விடுதிகளில் மூன்றில் ஒருவர் வெளிநாட்டவர்களாக உள்ளனர். இவர்கள் சீனா, மொறோக்கோ, அல்ஜீரியா, துனுசியா, செனகல் போன்ற இடங்களில் இருந்தே கல்விகற்க வருகின்றனர்.

அத்துடன் 2008ம் ஆண்டில் இருந்து மாணவர்களை வேலைசெய்வோர் வசிக்கும் இடங்களில் வசிக்க இடம் ஒதுக்குவதன் மூலம் பிரச்சினையின் தாக்கத்தை குறைக்க மாநகரசபைகள் முயல்கின்றன.மேலும் பாரிஸ் 18இல் 5 மாணவர்கள் ஒன்றாக ஒரே இடத்தில் இணைந்து வாழ இடம் ஒதுக்கப்பட்டு பரீட்சார்த்தமாக திட்டம் பரிசீலிக்கப்படுகின்றது. இவர்கள் அரச நிதி ஒதுக்கீட்டில் தங்கி இருப்பவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (YB)

## 3000 பொலிசார் குறைப்பு?



2012ம் ஆண்டு பட்ஜெட்டிற்கு ஏற்றவகையில், பிரான்சின் 3000 பொலிசாரை குறைக்கவுள்ளதாக தெரிவித்துள்ளார் உள்துறை அமைச்சர் Claude Gueant. குற்றச் செயல்கள் வருடா வருடம் அதிகரிக்கின்ற போதும் பிரெஞ்சு மக்கள் தொகைக்கு தேவையான அளவையும் விட கூடுதலான பொலிசாரே தற்போது கடமையில் உள்ளனர் என்கிறார் அவர்.

## பாரிஸ்-தமிழர் நிகழ்வுகள்

- ***சென் பற்றிக்ஸ் ஆண்டுவிழா***
சென் பற்றிக்ஸ் 12 ஆவது ஆண்டு விழா 12.7.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.

- ***கலாலயம் — அரங்கேற்றம்***
செல்வி. சாதனா சாந்தலிங்கம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 18.09.2011 அன்று பாரிசில் நடைபெற்றது.

- ***இந்தியக் கலாசார நிகழ்வு***
16/17.09.2011 ஆகிய இரண்டு நாட்கள் பாரிஸ் Pompidou அரங்கில் நடைபெற்றது.

- ***18வது கலைத்தென்றல்***
RTM பிரதேர்ஸ் வழங்கிய 18 ஆவது கலைத்தென்றல் 24.09.2011 அன்று பாரிஸில் நடைபெற்றது.

- ***ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம்***
La Courneuve மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு மன்றம் 25.09.2011 அன்று தனது 5வது ஆண்டினை நிறைவு செய்தது.

- ***சிற்றிதழ் வெளியீட்டு விழா***
வணக்கவொளி நூல் வெளியீட்டு விழா 25.09.2011 அன்று Porte de Paris இல் நடைபெற்றது

- ***பரதநாட்டிய அரங்கேற்றம்***
செல்விகள் ரவிசாருகி ரவீந்திரகுலம், ரவிசாளினி ரவீந்திரகுலம் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் 01.10.2011 Villeneuve St George இல் நடைபெற்றது.

- **நிருத்திய தர்ப்பனா**
நிருத்திய தர்ப்பனா நாட்டிக்கல்லூரியின் 10வது ஆண்டுவிழா 01.10.2011 அன்று Blanc Mesnil - Deux Pièices Cusine அரங்கில் நடைபெற்றது.




## 16வது தேர்த்திருவிழா



மாணிக்கவிநாயகர் 16 ஆவது தேர்த்திருவிழா 28.08.2011 அன்று பாரிசில் நடைபெற்றது. 40ஆயிரத்திற்கு மேற்பட்டோர் கலந்துகொண்டனர். - தினமலர்

## கிறிஸ்மஸ் ஒளிவிழா-2011




பிரான்ஸ் - இலங்கை கத்தோலிக்க ஆன்மீக பணியகம் நடாத்தும் கிறிஸ்மஸ் ஒளிவிழா 18.12.2011 பாரிஸ் Eglise St.Denys de la Chapelle, Salle Ste.Jeanne D'Arc இல் இடம்பெறுகின்றது.

## நயினைச்சுடர் - 2

பிரான்ஸ் - நயினை அபிவிருத்திக் கழகம் நடாத்தும் இரண்டாவது ஆண்டுவிழா எதிர்வரும் 05.11.2011 அன்று பாரிசில் நடைபெறவுள்ளது.

# செர்னோபில் அணுவுலை வெடிப்பு பிரான்ஸ் வரை தொடரும் தாக்கம்




சோவியத் ரஸ்யாவில் செர்னோபில்அணுவுலை வெடிப்பு 26 ஏப்ரல் 1986இல் இடம்பெற்றது. 15 ஆண்டுகள் தாண்டியும் அணுவுலை கதிர்வீச்சின் தாக்கம் பிரான்ஸ் வரை நீண்டு வருகின்றது.

இரண்டாம் உலகப் போரில் அமெரிக்க அரசு ஜப்பான் நாட்டின் கிரோஷிமா நாகசாகி நகர்களில் அணுக்குண்டு தாக்குதல் நடாத்தியது. இத் தாக்குதலில் ஏற்பட்ட கதிர்வீச்சு அபாயத்தை விட 100 மடங்கு கதிர்வீச்சு அதிகமாக செர்னோபில் உலைவெடிப்பில் ஏற்பட்டது.

இந்த கதிர்வீச்சின் தாக்கம் ரஸ்யாவையும் தாண்டி சுவீடன், பின்லாந்து, நோர்வே, ஓஸ்ரியா, பல்கேரியா, கிரீஸ், சுவிஸ், இத்தாலி, பிரான்ஸ் வரை நீண்டது. இதன் பாதிப்புக்கள் இன்னும் இரண்டு நூற்றாண்டுகள் வரை இருக்கும் என்று சொல்லப்படுகின்றது.

பிரான்சில் வயது வந்தவர்களிலும் பார்க்க இளவயதில் இருந்தவர்களுக்கே கூடுதலான பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அவர்களின் நரம்பியல் தொகுதியே கூடுதலான தாக்கத்திற்குள்ளாகின்றது என தெரியவருகின்றது.

பிரான்சின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள அல்ப்ஸ் பிரதேசம், டுறோம் (Drôme), யூறா (Jura) மற்றும் கோர்சிக்கா தீவின் கிழக்குப் பகுதியில் உள்ள மக்களில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

சுனாமியின் போது யப்பானில் ஏற்பட்ட அணுஉலை விபத்தின் கதிர்வீச்சு உலகின் மறுகோடிவரை சென்றது. ஆனால் தற்போது முழு உலக மக்களுமே அணுவுலை விபத்து கதிர்வீச்சு எல்லைக்குள்ளேயே வாழ்கின்ற நிர்ப்பந்தத்தில் உள்ளனர்.

(YB)

## பாரிசில் தமிழர் வைபவங்களுக்கு பயன்படுத்தக்கூடிய மண்டப முகவரிகள்

- **கணேசா மண்டபம்**
  90 Rue Emile Zola
  93120 La Courneuve
- **PALAIS 91**
  2 Rue Jules Guesdes,
  91130 Ris-Orangis
- **LE MILLENAIRE**
  3 Place du 19 Mars 1962
  77176 Savigny-Le-Temple
- 2 Avenue de Saint-Rémy
  93200 Saint-Denis
- **La Salle «La Briche»,**
  71 rue de la Briche
  93100 St-Denis
- **Salle ASPG**
  130 Rue de Saint-Prix
  95150 Taverny
- **Place du Cinquantenaire**
  46 , Rue de Saint-Denis
  93300 Aubervilliers
- **Place Bexley**
  91000 Evry
- **Salle La Victorieuse**
  4, rue Louis Armand
  92600 Asnières / Seine
- 38 rue du Général Malleret-Joinville
  94400 Vitry-sur-Seine
- **Jardin des Aveline**
  60 Rue Gounod
  92210 Saint Cloud
- **La Sapinière**
  Rue Condorcet
  91350 Grigny
- 11 Rue Jean XXIII
  95220 Herblay
- **La Salle Emile Zola**
  28 rue Emile Zola
  94130 Nogent sur Marne
- 20 Rue de l'Avenir
  93800 Epinay sur seine
- **Maison des Associations**
  2 Rue Hoche
  95120 Ermont (Cernay)
- **La Salle**
  23 Rue Berthie Albrecht
  95210 Saint Gratien
- **Venue Studio Blue**
  7/9, rue des Petites Ecuries
  75010 Paris
- **Sci Quai de Seine**
  71 - 73 Rue de la Briche
  93200 Saint-Denis
- 22 Boulevard de Valmy
  92700 Colombes
- **Salle Maurice Baquet**
  76 avenue Raspail
  Gentilly
- 1, rue de l'Église
  92310 Sèvre
- 07, rue d'Enghien
  92700 Colombes
- **Salle Maziere**
  Rue des Ecluses
  78955 Carrières sous Poissy
- **Pizzaria Gasparino**
  128 av du Moine
  75014 Paris
- **La Salle de fête**
  Noisy le Sec.
  (12 - 14 Rue de la Pointe
  93130 Noisy le Sec)

(PR)

**உங்களுக்கு உதவலாம்!** இன்னும் வரும் ...

# பிரான்சில் பெண் ஆசிரியர் 82%


பிரான்சில் ஆரம்பப் பள்ளிகளில் இருந்து உயர் நிலைப் பள்ளிகள் வரை உள்ள மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களின் ஆண், பெண் விகிதம் சமநிலையற்று இருக்கின்றது. 1954ம் ஆண்டில் 65% ஆக இருந்த பெண் ஆசிரியர்களின் விகிதம் 2011 ம் ஆண்டில் 82% ஆக அதிகரித்துள்ளது.

இந்த சமநிலை அற்ற போக்கு சமூகத்தில் பிரச்சனைகளை ஏற்படுத்தக்கூடியதென்று அரசு கவலை கொள்கின்றது. இதன் தாக்கம், குறைந்த வயதுள்ள மாணவர்களின் ஆரம்பப் பள்ளிகளிலேயே கூடுதலாக உள்ளது. உயர் கல்வியைத் தொடர்பவர்களிடையே இதன் தாக்கம் குறைவாகவே உள்ளது.

குழந்தைகள் (Enfants) மற்றும் வளர் இளம் பருவத்தினர் (Adolesents) மத்தியில் ஆசிரியர்கள் பெண்கள் மயப்படுத்தப் பட்டுள்ளபடியால் மாணவர்கள் ஆண்களுடன் பழகுகின்ற அல்லது கருத்துப்பரிமாறுகின்ற வாய்ப்பை இழப்பதாகவும், மாணவர்களிடையே இது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தக் கூடுமென்றும் கருதப்படுகிறது. (YB)



டுனி (Dugny) நகரில் 1947ல் பணிபுரியும் பெண் ஆசிரியர்






### சின்னட்டிக்கதை

# ஏனோ

பக்கத்துவீட்டு நிக்கோலாவிற்கு வயசு எட்டு. பார்ப்பதற்கு "குளு குளு" என்றிருந்தான். அவனது நிறமும் உருண்டையான உருவமும் ரசிக்கக்கூடியதாக இருந்தது.

"சவா நிக்கோலா" என்று கேட்டால் கழுத்துக்குள் தலையை ஒளித்துச்சிரிப்பானே தவிர பதில் சொல்லமாட்டான். தான் குண்டாக இருப்பது அவனுக்கு கொஞ்சம் வெட்கமாகவும், சங்கடமாகவும் இருந்தது.

அவன் சைக்கிள் பழகிக்கொண்டிருந்தான். ஒரு மாதத்திற்கு மேலாகியும் அவனால் தேர்ச்சிபெறமுடியவில்லை. ஆனாலும் எனக்கு அது மகிழ்ச்சியாயிருந்தது. ஏனெனில் ஒவ்வொரு மாலை வேளைகளிலும், சனி ஞாயிறு தினங்களிலும் அவன் சைக்கிள் பழகுவதை யன்னலோரம் நின்று ரசித்துக்கொண்டிருந்தேன். அவனுடைய அப்பா அவனுக்கு கற்றுக்கொடுத்தார். அவனுடைய அக்கா, அண்ணா, நண்பர்கள் என்று ஒரு பட்டாளமே அவனுக்கு உதவிக்கொண்டிருந்தது. ம்கூம் அவனது சைக்கிள் ஒரு இஞ்சிகூட அசைவதாய் இல்லை.

ஒருநாள் அப்பா அவனை சைக்கிளில் இருத்திவிட்டு தைரியப்படுத்தினார். "இந்தா கான்ரிலில் சரியாய் கையைபிடி, கீழ பார்க்காதே, நேரே பார்த்தபடி மிதி, நான் உன்கூடவே வருகிறேன் பயப்படாதே" என்றுவிட்டு அப்படியே அவன்பின்னால் சிறிதுதூரம் ஓடியபின் கையைவிட்டார்.



அவன் ஓடத்தொடங்கிவிட்டான். அப்பா சந்தோசத்தில் சிரித்தார். அவன் திரும்பிப்பார்த்தான். அப்பாவைக்காணவில்லை. ங..அ..அ..ஆ..அப்பா என்றான். அவ்வளவுதான். தொப்பென்று விழுந்தான். அப்பா ஓடிப்போய் அவனைத்தூக்கி, காலில் ஏற்பட்ட சிறு உராய்வை தடவிவிட்டு தைரியம் கொடுத்து மறுபடி ஓடவிட்டார்.

அவன் திரும்பத்திரும்ப முழங்காலைப் பார்த்தான். மெதுவாய் ரத்தம் கசிந்தது. ரத்தத்தையும் அப்பாவையும் சைக்கிளையும் மாறிமாறிப்பார்த்தான். அவனுக்கு சைக்கிளில் கோபம் கோபமாக வந்தது. கொஞ்சம் விட்டால் அழுதுவிடுவான் போலவுமிருந்தது. அப்பா விடவில்லை. சிரித்தார். உதெல்லாம் சாதாரணவிடயம். நாங்கள் பழகும் போது எத்தன தரம் விழுந்தெழும்பியிருக்கிறோம் என்று தன் கையிலிருந்த காயத்தை காட்டி அவனை மீண்டும் தைரியப்படுத்தினார். அவன் சைக்கிளை மெதுவாகத் தூக்கினான்.

அவன் இப்போதெல்லாம் நன்றாக சைக்கிள் ஓடுகிறான். நண்பர்களுடன் போட்டிபோட்டுக்கொண்டெல்லாம் ஓடுகிறான். அவனுடைய தேகமும் கொஞ்சம் இளைத்துவிட்டது.

**நா**னும் நன்றாக சைக்கிள் ஓடுவேன். பலபோட்டிகளில் பரிசில்களும் வென்றிருக்கிறேன். ஒற்றைச்சில்லில் நின்று வித்தைகள் எல்லாம் என்னால் செய்யமுடியும். சுழித்து வளைத்து, மல்லாந்து படுத்தபடியெல்லாம் என்னால் ஓடமுடியும்.

எனக்கு இப்போ வயது எழுபதாகிறது. எனக்கு சைக்கிள் கற்றுத்தந்தவர்களையெல்லாம் நினைத்துப்பார்க்கிறேன். ஒருவர்கூட நினைவிற்கு வருகிறார்களில்லை. நான் சுயம்புவாக சைக்கிள் கற்றிருக்கமுடியாது. எனக்கும் யார்யாரோவெல்லாம் என் தோளில் கைபிடித்து, சீற்பிடித்து, நான் விழுந்தெழும்பியபோதெல்லாம் என்னைத்தூக்கிவிட்டு என்னைத் தடவித் தேற்றிவிட்டுத் தானிருப்பார்கள்.

அவர்கள் இதைச்செய்யும்போது வாழ்நாளில் நான் தங்களை மறக்கக்கூடாதென்பதற்காகவோ அல்லது வேறு ஏதாவது காரணத்திற்காகவோ இதைச்செய்திருக்கமாட்டார்கள். அவர்கள் எனக்கு சைக்கிள்கற்பித்த சம்பவமோ அல்லது நானோகூட இந்தநேரத்தில் அவர்களது நினைவில் வரச்சந்தர்ப்பம் கிடையாது. ஆனால் அவர்களில் ஒருவர்கூட என் நினைவில் இல்லை என்பதை நினைக்கும்போது எனக்கு சங்கடமாய் இருக்கிறது. மனசு குறுகிப்போகிறது.

-அசோகா



## வாசுகனின் ஓவியக் கண்காட்சி



பிரான்ஸ் நாட்டையும் தன் கலைத் திறனையும் ஒருங்கு சேரப் பயன்படுத்திக்கொள்ளும் ஓவியர் வாசுகனின் ஓவியக் கண்காட்சி அண்மையில் பாரிஸில் நடைபெற்றது. மகாஜனாவின் பழைய மாணவரான இவர் பிரான்சில் பல்வேறு ஓவியக் கண்காட்சிகளையும் நடாத்தி வருகிறார்.

Man in the Mask
Exposition de Tableaux
7 sep - 01oct 2011
Espace Couleurs et Blancs
41 rue Blanche75009 PARIS




தோன்றலும் மறைதலும் பின் மீண்டும் முளைவிடலும் சிற்றிதழ்களின் பண்பு. இதற்கு பாரிஸ் சூழலும் விதிவிலக்கல்ல. இதோ! புதிதாய் அரும்புகிறது வணக்கவொளி. வி. பாஸ்கரனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் வணக்கவொளி உங்கள் தார்மீக ஆதரவை வேண்டிநிற்கிறது.

## ரி. தயாநிதியின் ரணங்கள்



பாரிசில் நாடகக் கலைஞராக அறியப் பட்ட சின்னக்குட்டி ரி.தயாநிதியின் **ரணங்கள்** கவிதை நூல் வெளியீடு எதிர்வரும் 30.10.2011 அன்று பரிஸ் Bagnolet மண்டபத்தில் இடம்பெறுகிறது.



## அனுபவி ராஜா அனுபவி..

புகைப்படக்கருவி ஒன்றிற்குள் சிக்கிக்கொண்ட இந்த புகைப்படம் எனது இணைய அஞ்சல் பெட்டிக்குள்ளும் வந்து விழுந்தது. ரசித்தேன். நன்றாய் ரசித்தேன். புகைப்படத்தின் சொந்தக்காரர் பற்றிய தகவல் தெரியவில்லை. முடிந்தால் யாராவது அறியத் தாருங்கள். ரா.ரா.

## WOW சொக்கா...!



கறுப்பு சொக்லேற் சாப்பிடுவதால் மனிதர்களுக்கு நன்மையுண்டு என்று அண்மைய ஆய்வுகள் சொல்கின்றது. சந்தோசமான செய்தி தானே?
இவை இரத்தநாளங்களைப் பாதுகாக்கவும், இதயத்தை சீராக வைத்திருக்கவும், புற்றுநோய் தடுப்பிற்கும் உதவுகின்றன. அத்துடன் உயர் இரத்த அழுத்தத்தை மட்டுப் படுத்துவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. சிவப்பு வைன் அல்லது தேனீர் குடிப்பதைவிட கரும் சொக்லேற் சாப்பிடலாம் என்கின்றனர் ஆய்வாளர்கள். எனினும் பால், வெள்ளை சொக்லேற்றுகளை உண்பது உடலிற்கு நல்ல விளைவை ஏற்படுத்தாது. இவற்றில் உடற்சக்திப் பொருளும், கொழுப்பு சத்தும் அதிகமுள்ளதால் நாள்தோறும் சாப்பிடுவது உகந்ததல்ல.

## Wangari Maathai



Green Belt Movement என்ற அமைப்பினை 1977இல் உருவாக்கிய மாத்தா 40 மில்லியனிற்கு மேற்பட்ட மரங்களை அவ்வமைப்பு மூலம் நாட்டியுள்ளார். 30000 இற்கு மேற்பட்ட பெண்களை தேனீ வளர்ப்பு, காடுகளை பராமரித்தல், உணவு சேமிப்பு முதலிய துறைகளில் ஈடுபடச் செய்து வருமானம் பெற வழிசெய்தார். 1984 இல் Right Livelihood Award ஐ தனதாக்கிய மாத்தா 2004இல் நிலைத்த மேம்பாடு மற்றும் அமைதிக்கான **நோபல் பரிசுபெற்ற ஆபிரிக்க முதற் பெண்ணாவார்.** சுற்றுச்சூழல் பேணுகைக்காக வழங்கப்பட்ட முதல் நோபல் பரிசு இதுவாகும். ஆபிரிக்க பெண்ணினத்தின் அடையாளமாய் இருந்த மாத்தா 71 வயதில் கென்யாவின் Nairobi யில் கான்சரினால் கடந்த செப்ரெம்பரில் காலமானார்.

## புத்துயிர் பெற்று மீண்டும் எழுகிறது உலகின் புதிய வர்த்தக மையம்

செப்ரெம்பர் 11, 2011இல் அழிக்கப்பட்ட உலக வர்த்தக மையத்தின் இரு கோபுரங்களையும் ஈடுசெய்யும் வகையில் கவர்ச்சிகரமானதாகவும், ஆடம்பரமானதாகவும் எழும்பிக் கொண்டிருக்கிறது புதிய உலக வர்த்தக மையம்.
நியூயோர்க்கில் மீண்டும் புத்துயிர் பெறும் இக்கட்டடத்தில் இதுவரை 80 மாடிகள் பூர்த்தியாகியுள்ளன.
இதன் கட்டுமானப் பணிகள் 2016ம் ஆண்டில் நிறைவடையும் என்கின்றனர்.



## இருபது வருடங்களை தொட்டு நிற்கும் இணையம்

ஒகஸ்ற் 06, 1991 - அன்றே பொதுச் சேவையாக இணையம் வேலை செய்யத் தொடங்கிய நாளாக குறிக்கப்படுகின்றது. HTML இணைய மொழியை உருவாக்கிய பிரிட்டிஷ் கணனி விஞ்ஞானியான பெர்னெர்ஸ் லீ (Sir Tim Berners-Lee) என்பவரின் 3 மாத உழைப்பிலேயே இணையம் உருவானது. பெர்னெர்ஸ் லீ தற்போதைய உலகளாவிய வலைச்சங்கத்தின் தலைவராக உள்ளார்.

Robert Cailliau **இனால் வடிவமைக்கப்பட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த** logo
(Robert **பெர்னெர்ஸ் லீ இன் உதவியாளராக பணிபுரிந்தவர்**)

இன்று உலகம் முழுவதும் 30 சதவீதமான மக்கள் நாளாந்தம் இணையத்தை பயன்படுத்துகின்றனர்.

Aji


என்னதான் செய்தாலும்
என்னை விட்டு
பிரியமாட்டேன் என்று
அடம் பிடிக்கும்
உன் நினைவுகளை
நான் எப்படி வெறுப்பேன்

Ajin கிறுக்கல்

மின்னல் எங்கிருந்து
வருகிறதென்று
கேட்டேன்
வானத்தில் இருந்து
என்றனர்
அப்படி என்றால்
உன் கண்கள்
என்ன வானமா?

## Le Petit Prince

Antoine de Saint Exupéry இனால் 1943ம் ஆண்டளவில் எழுதப்பட்ட இந்நாவல் நன்கறியப்பட்ட ஒரு பிரெஞ்சு நாவல். 190 மொழிகளில் மொழிமாற்றம் செய்யப்பட்ட இந்நாவல் இற்றைவரை பிரெஞ்சு பாடசாலைகளில் அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றது.
பிள்ளைகளிற்குரிய நாவலாக இது அடையாளம் காணப்பட்ட போதும் எல்லா வயதினராலும் விரும்பி வாசிக்கப்படுகின்றது
Antoine de Saint Exupéry 1900ம் ஆண்டு லியோனில் பிறந்தவர். சிறந்த விமானியாகவும், எழுத்தாளராகவும் தன் வாழ்வில் திகழ்ந்தார். 1944 இல் இறந்த இவரை கௌரவிக்கும் வகையில் பிராங் நாணயம்




இருந்த காலத்தில் இவர் படம் பொறித்து புழக்கத்திலிருந்த 50 பிராங் நாணயத்தை நீங்களும் பார்த்திருக்க கூடும். 2000ம் ஆண்டு Lyon Satolas Airport இவரின் நினைவாக **Lyon-Saint-Exupéry Airport** என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

**அறிந்துகொள்க.**
பிரான்சின் பரப்பளவு 260,558 சதுரமைல்

உருப்படியான வேலைக்கே உலகம் உன்னை அழைத்திருக்கிறது மறந்துவிடாதே.

ஓர்மம் ஒப்பற்ற சாதனைகளை உருவாக்கும்

– பொன்னியின் பக்கம் –

## அவசர இலக்கமாக




காது கேட்காதவர்களும், கேள்தகவு குறைந்தவர்களும் தம் அவசர தேவைக்கு தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கமாக 114 நாடு முழுவதும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அவசர உதவியை பெறுகையில் புரிந்துகொள்ள சிரமப்படும் பிரான்சின் 4 மில்லியன் மக்கள் இலவசமாக 7 நாட்களும் 24 மணிநேரமும் இந்த நம்பரை அழைப்பதன் மூலம் தமக்கு தேவையான உதவியை பெற்றுக் கொள்ள முடியும்.பாதிக்கப்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்களிற்கு உதவி புரிபவர்கள் SMS அல்லது Fax ஒன்றை உதவி கோரி 114இற்கு அனுப்ப வேண்டும். 114 இலிருந்து உடனடியான பதில் உங்களிற்கு ஒரு நிமிடத்திற்குள் தரப்படும். பதில் ஏதும் வராவிடில் மீண்டும் SMS அல்லது Fax ஐ அனுப்புங்கள்.

உங்களிற்கு வந்த பதிலில் உங்கள் பிரச்சினை தொடர்பான மேலதிக விளக்கங்கள் கேட்கப்பட்டிருக்கும். அதனை புள்ளடியிட்டு, நிரப்பி மீண்டும் அனுப்புங்கள்.

உங்கள் விபரங்கள் தெளிவாக கிடைக்குமிடத்து 114, உங்கள் இடத்திற்கு அருகிலுள்ள அவசர பிரிவுகளுக்கு உதவி வேண்டி SMS அல்லது Fax ஐ அனுப்பி உங்களிற்கான உதவிபெற ஆவன செய்யும்.

மேலதிக விபரங்களிற்கு : www.handicap.gouv.fr/114

www.nilafrance.com
நிலா பற்றிய
உங்கள் அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகளுக்கு
சங்கீதா அச்சகம்
லாச்சப்பல்

E-PAIEMENT MOBILE

## பாதுகாப்பான வழியில் இணையத்தில் பணம் செலுத்த Buyster

மொபைல் போன் ஊடாக இன்ரநெற்றில் பாதுகாப்பான முறையில் பணம் செலுத்துவதற்கு தற்போது நடைமுறைக்கு வந்துள்ள Buyster இன்னும் ஐந்து வருடங்களில் வங்கியட்டைகளின் சிறிய சகோதரன் என்று கூறுமளவிற்கு உருவாகிவிடும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்கள் Buyster ஐ உருவாக்கியவர்கள்.

France Telecom, Bouyques Tele-com, SFR, Atos Origin இவற்றின் பங்களிப்போடு பிரான்சின் வங்கிகளும் இணைந்து Buyster சேவையினை வழங்கவுள்ளன. Paypal இற்கு பிரான்சின் பதில் என்கின்ற வகையில் உருவாகின்றது Buyster.
வழமைபோன்றே Buyster பயன்படுத்தவிரும்பும் பயனர் ஒருவரும் தனக்கான கணக்கொன்றை உருவாக்க வேண்டும். பயனரின் வங்கி விபரங்களுடன் மொபைல் எண்ணும் இணைந்து இக்கணக்கு உருவாக்கப்படுகின்றது. எனினும் அனைத்து வங்கித் தகவல்களும் 6 இலக்க பின்கோட் மூலம் பாதுகாக்கப்படும். Buyster இல் வங்கி விபரங்கள் எதுவும் இணையத்தில் வெளிப்படுத்தப்படாமல் மொபைல் எண் மாத்திரம் வழங்கி பணம் செலுத்த முடியும் என்கின்றனர் Buyster குழுவினர்.

படித்ததில் பிடித்தது

நீ வெளிச்சத்தில் சென்றால்
உலகமே உன்னைப்
பின்தொடரும்
நீ இருட்டினில் சென்றால்
உன் நிழல் கூட
உன்னைப் பின்தொடராது.



## பாரிஸ் 18இல் புதிய பள்ளி வாசல்

ஒப்பீட்டளவில் முஸ்லீம் மக்கள் மதஅனுஷ்டானங்களில் அதிக அக்கறை செலுத்துபவர்கள். வெள்ளிக்கிழமைகளில் தவறாது தொழுகைக்கு நேரமொதுக்குவார்கள். இடநெருக்கடியுள்ள பாரிஸ் நகரில் வீதிகளை முத்தமிட்டு அவர்கள் தொழுகையில் ஈடுபடுவதை பலரும் பார்த்திருப்பீர்கள். இவர்களது இவ்வகையான தொழுகையை கட்டுப்படுத்த பிரெஞ்சு அரசு தீவிரமாக ஆலோசித்துவருகிறது.

இந்நிலையில் பாரிஸ் 18, Goutte'd'Or வீதியில் தொழுகையில் ஈடுபடும் மக்களுக்கு ஓர் நல்லதீர்வு இப்போது எட்டப்பட்டிருக்கின்றது. தற்போது இவர்கள் தொழுகை செய்வதற்காக புதிய பள்ளிவாசல் ஒன்று அமைக்க பெருந்தெருவில் இருமடங்கு இடவசதியுள்ள இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுமக்களின் வசதி கருதியும், றோமன் கத்தோலிக்கம் வேரோடிய இம்மண்ணில் தாம் கைவிடப்பட்டுவிட்டதாக உணரும் இம் முஸ்லிம் பெரும் சமூகத்தை ஒருங்கிணைப்பதன் மூலம் மதச்சார்பற்றது இந்நாடு என பெருமை கொள்ளும் தேர்தல் நோக்கிலும் இவ்விடம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அரசியல் பின்னணியில் ஓர் கருத்து நிலவுகிறது.
இவ்விடத்தின் வாடகை 2000 சதுரமீற்றரிற்கு வருடமொன்றிற்கு 30,000 யூரோக்களாகும் என்றும் 3 வருடங்களிற்கு இவ்விடம் தற்போது வாடகைக்கு விடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றார் உள்துறை அமைச்சர் Claudie Guéant.

# Paris - Roissy உங்களை வரவேற்கின்றது Sound Corner



விமானம் புறப்படுவதற்கு முன் 2 மணித்தியாலம் அல்லது ஒரு மணித்தியாலம் முன்னதாக விமான நிலையத்தையடைந்து பாஸ்போர்ட்டும், ரிக்கற்றும் கையில் இருக்க, பட படக்கின்ற மாதிரி ஏதோ நெஞ்சுக்குள்ள செய்ய நின்ற அனுபவம் உங்களுக்கும் இருக்கும். விமானம் ஏறுறது என்றாலே ஏதோ ஒரு பரபரப்பு..

இவ்வாறு நீங்கள் படும் அவஸ்தையை எப்படியாவது குறைத்துவிட முயல்கின்றது பாரிஸ் விமான நிலையம். Roissy இன் Terminal 2 பகுதியில் ரிலாக்ஸ் செய்வதற்காக உங்களை வரவேற்கின்றது Sound corner. 50சதுரமீற்றர் பரப்பளவில் அமைந்த இப்பகுதி இசையை கேட்பதற்கென ஒதுக்கப்பட்டிருக்கின்றது.சாம்சங் மற்றும் யுனிவேர்சல் மியூசிக் இணைந்து இவ் வசதியை ஏற்படுத்தியுள்ளது. இங்கு நீங்கள் வெவ்வேறு வகையான இசையினை இலவசமாக ரசிக்கலாம். அல்லது உங்கள் MP3 ஐ பொருத்தி இசைமழையில் நனையலாம்.

பயணிகள் விமானத்திற்கு காத்திருக்கும் நேரத்தில் இலவசமாக Sound corner இல் உள்ள கொரிய Touch pad இல் 100 இற்கு மேற்பட்ட வெவ்வேறு வகையான இசையைக் கேட்கலாம். இவையாவும் மாதம் ஒருமுறை மீள்புதுப்பிப்பு செய்யப்படும். (தமிழ் பாட்டுக் கூட இருக்கலாம். எயார்போர்ட் போனால் கேட்டுப்பாருங்கள்)

தங்கள் சொந்த MP3 இல் பாடல் கேட்க விரும்பின் அதற்கென தனியான பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இங்கு நீங்கள் ஸ்பீக்கர் அல்லது கெட்செற் ஐ உங்கள் விருப்பம் போல் பயன்படுத்தலாம்.

இவற்றைவிட Sound corner பகுதியில் பொதுத்திரை ஒன்றும் உள்ளது. குழந்தைகளிற்கு விளையாடவெனவும் ஒரு பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து வருடங்களில் தனது பயணிகளின் வசதி கருதி 30 தடவையாக தன்னை மெருகூட்டியிருக்கிறது பாரிஸ் விமான நிலையம்.

(PK)




தற்போது பிரான்சில் அதிகூடிய சம்பளம் வாங்குவோர், வேலை இழக்கநேர்ந்தால் 6000 யூரோக்கள் வரை வேலை இழப்பீட்டு பணமாக (Chômage) பெற்றுக்கொள்கின்றனர். ஆனால் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் 2500 யூரோக்கள் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும்.

இதேபோன்று பிரான்சிலும் 2500 யூரோக்கள் உச்சபட்ச தொகையாக வழங்க சட்டவிதிகளில் மாற்றம் கொண்டுவரப்படவுள்ளது. 2012ம் ஆண்டில் இது சாத்தியம் என்கிறது UMP கட்சி. (MM)



**நீ சுலபமாக சொல்லிவிட்டாய்**
**பேசாதே என்று**
**எனக்கு மட்டும்தான் தெரியும்**
**நான் கடக்கும்**
**ஒவ்வொரு நொடியையும்**
**எத்தனை வலிகளோடு**
**கடக்கின்றேன் என்று**
**அஜீ**

வெறும் கடமையுணர்வின் மூலமோ
குறிக்கோளின் மூலமோ பெறுமதியான
எதுவும் நிகழ்ந்துவிடுவதில்லை.
மாறாக மனிதர்களிலும்
கொண்ட இலட்சியத்திலும்
உள்ள விசுவாசத்திலும்
அர்ப்பணிப்பிலுமே
அவை நிகழ்ந்து விடுகின்றன.
- அல்பேட் ஐன்ஸ்டீன்.

# பிரான்சில் திவாலாகும் வங்கிகள் விழி பிதுங்கும் வாடிக்கையாளர்



கடந்த சில வருடங்களாக உலக பொருளாதாரம் மிகவும் பலவீனமடைய வங்கிகள் பல திவாலாகிக் கொண்டிருக்கிறன.

பணச் சிக்கலில் உள்ள சில வங்கிகளுக்கு பிரான்ஸின் Crédit Agricole வங்கியும் Société Générale ம் தாராளமனதோடு கடன் வழங்கியுள்ளன. இன்று வங்கிகள் திவாலடைய பிரான்ஸ் மக்கள் இயல்பாகவே சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். இந்த வங்கிகளில் வைத்திருக்கும் சேமிப்பிற்கு என்னாகப் போகிறதோ என்று விழிபிதுங்கத் தொடங்கிவிட்டார்கள். இதனை அறிந்த அந்த இரண்டு வங்கிகளும் தங்களது வங்கிகளில் சேமிப்புக் கணக்கினை வைத்திருக்கும் தமது வாடிக்கையாளர்களுக்கு சில உறுதிகளை வழங்குகின்றன.

வங்கிகளின் பணப் பலவீனத்தினால் வாடிக்கையாளர்கள் தமது சேமிப்புக் கணக்கிலுள்ள பணத்தினை உடனடியாகவே மீளப் பெறவேண்டிய அவசியமில்லை. காரணம், சேமிப்பு என்பது வங்கிகளில் இருந்தாலும் அதற்கான முழுப்பொறுப்பினையும் இந்த நாட்டு அரசாங்கமே எடுத்துள்ளது. அந்த சேமிப்புக் கணக்கிலுள்ள பணத்தினை வங்கிகள் தராதுவிட்டால் அதனை அரசே வாடிக்கையாளர்களுக்குக் கொடுக்க வேண்டும். அந்த வங்கிகள் பணப் பிரச்சனையால் மூடவேண்டிய நிலை ஏற்பட்டாலும் கூட அஞ்சவேண்டிய அவசியமில்லை என்கின்றன.

அத்தோடு சேமிப்புக் கணக்கிற்கான காப்புறுதியாக 100000 (ஒரு இலட்சம்) யூரோக்கள் இருக்கின்றது. ஆனபடியால் வாடிக்கையாளர்களின் சேமிப்புக் கணக்கிற்கு வங்கி, அரசு, காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ஆகியவை பொறுப்பாக உள்ளன என்பதை இந்த வங்கிகள் அறிவித்துள்ளன. ஆகையால் வாடிக்கையாளர்கள் பயப்பட வேண்டியதில்லை என்பதை மக்களுக்குத் இவ் வங்கிகள் தெளிவுபடுத்தியுள்ளன.

- வரதன்




ஒரு நூற்றாண்டிற்கு முன்பே அல்ஸைமர் நோய் பற்றி அறியப்பட்டாலும், இப்போதுதான் அதன் தாக்கம் பற்றி உலகம் மிரள்கிறது.

தமிழில் இந்த நோய் பற்றி சொல்வதானால் "மாறாட்டம்" என்று மொழி பெயர்த்துக்கொள்ளலாம். ஊரில் முதியோர் பலர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதை பாத்திருக்கின்றோம். உலகத்தில் 36,000 000பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாக தற்போதைய புள்ளிவிபரங்கள் கூறுகின்றன. இன்னும் நாற்பது ஆண்டுகளில் இது மும்மடங்காக அதிகரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அல்ஸைமர் நோய் பற்றிய ஆராய்ச்சிதான் இந்தப்படம். செப்.11 முதல் பிரான்சில் அரங்கிற்கு வந்திருக்கிறது. மனிதக்குரங்கொன்றை பிடித்து அந்தக்குரங்கிற்கு மனித உணர்திறனை உள்நுழைத்து இந்நோய் பற்றி ஆராய்ச்சி செய்யும்போது ஏற்படும் பிரச்சினைகளை உணர்வு ரீதியாகச் சித்தரிக்கிறது படம். ரிற்றானிக்கிற்குப்பின் நல்லதொரு தமிழ்படம் பார்த்தது போன்றதொரு உணர்வு ஏற்படுகிறது. மனித உணர்வுகளை உள்ளீர்த்துக்கொண்ட குரங்கு தவிர்க்கமுடியாது மீண்டும் குரங்குகளின் சேனைக்குள் அடைபடும்போது அந்தக்குரங்கு அனுபவிக்கும் துயர், இடர்பாடுகள் மனதை உருகவைக்கின்றன. ஒரு எல்லைக்கு மேல் தன்னிலை உணர்ந்து தன்னினத்தோடு ஐக்கியமாகி கூண்டுக்குள் அடைபட்டுக்கிடக்கும் அந்தக்குரங்கு தன்னினத்திற்காகப் போராட ஆரம்பிக்கிறது.

ஆராச்சியின்போது பலமடங்கு மனிதமூளை வலுவைப் பெற்றுக்கொண்ட குரங்கின் பேராவேசத்திற்கு முன்னால் எவரும் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. மனிதனை இனங்கண்டு வெறுக்கும் அந்தக்குரங்கு தன்கூட்டத்தோடு செய்யும் அட்டகாசங்கள் பழிவாங்கல்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணத்தில் பார்த்த Mighty himalayan man படத்தை நினைவுபடுத்துகிறது. ஒரு கட்டத்தில் மனித எதிர்த்தாக்குதலுக்கு ஈடுகொடுக்க தற்கொடைத்தாக்குதலில் உயிர்துறக்கும் முதிர்குரங்கு ஒன்று மனதில் ஆழமாய் பதிந்துதான் போகிறது. உணர்வு பீறிடத்தான் செய்கிறது.

எப்போதாவது போகும் பிரெஞ்சுத் தியேட்டரிற்கு வீட்டில் சும்மா இருக்கும் அம்மாவையும் அழைத்துப் போவதுண்டு. படம் தொடங்கி சொல்லிவைத்தாற்போல் பத்து நிமிடத்திற்குள் கொறட்டை விடும் அம்மா, 2மணி 10 நிமிட இந்தப் படம் முடிந்தபின்பும் சீற்றில் விறைத்தபடி இருந்துகொண்டு என்ன அதுக்குள்ள படம் முடிஞ்சுதோ என்று கேட்டா என்றால் யோசித்துப்பாருங்களேன்!

- ரா.ரா

## கரட் கேக்



வீட்டில அப்பாவுக்கு சுகர், அக்கா டயற். வாய்க்கு ருசியாக என்ன செய்தாலும் கூடிச்சாப்பிட முடியவில்லையே என்ற கவலையா? கவலையை விடுங்கள். இதோ! உங்களுக்காக இந்தக் கரட்கேக் !

**தேவையான பொருட்கள்**

கரட் - 380g (தோல் சீவிய பின்பு)
பிறௌவுண் சுகர் - 300g
முட்டை - 4
மா - 300g
நல்லெண்ணெய் - 200gml
கறுவாத்தூள் - 2 தேக்கரண்டி
அப்பச்சோடா - 1 தேக்கரண்டி
பேக்கிங் பவுடர் - 2 தேக்கரண்டி
வனிலா - 2 தேக்கரண்டி
உப்பு - சிறிதளவு

**செய்முறை**

❍ மாவுடன் பேக்கிங் பவுடர் அப்பச்சோடா சேர்த்து நான்குமுறை அரித்துக்கொள்ளவும்.
❍ கரட்டை சம்பல்போடுவதுபோல் அதாவது சிறிய துளைகொண்ட துருவியால் துருவிக்கொள்ளவும் ஒரு பாத்திரத்தில் சீனி, முட்டை என்பவற்றை விட்டு நன்றாக அடித்துக்கொள்ளவும். சீனியும் முட்டையும் நன்றாக அடிபட்டவுடன் அதற்குள் நல்லெண்ணெய், மற்றும் அரித்து வைத்திருக்கும் மா, கறுவாத்தூள், உப்பு என்பவற்றைச் சேர்த்து நன்றாக அடிக்கவும்
❍ பின்பு துருவிய கரட் மற்றும் வெனிலா எசன்ஸ் சேர்த்து கரண்டியால் கலந்துகொள்ளவும். அதாவது அடிக்கக் கூடாது. (இக் கலவையை நன்றாக அடித்தால் கேக் மென்மையாக வராது)
❍ பின்பு கேக் றேயில் பேப்பர் போட்டு 175 டிகிரியில் 30 நிமிடம் பேக் செய்யவும்.

அவ்வளவுதான். கரட்கேக் றெடி.

உடலுக்கு எந்தக் கெடுதலும் இல்லையென்று அடித்துச்சொல்கிறார்கள் நாலு விசயம் தெரிந்தவர்கள். நாங்கள் நம்பித்தானே ஆக வேண்டும்.!

- (RS)

## Lucky Bamboo



இந்த அதிஸ்ட மூங்கில் தண்டுகள் உங்கள் பலரது வீடுகளையும் அலங்கரிக்கக்கூடும். மனித குலத்தின் பிறப்பிடம் ஆபிரிக்கா என்பதுபோல் இந்த மூங்கிலின் சொந்த இடம் ஆபிரிக்காதான் என்கிறது ஆய்வொன்று. ஆனாலும் எம்மை எட்டுவது எப்படியோ ஆசியநாடான சீனாவிலிருந்துதான். சீனாநாட்டு மரபுப்படி இம் மூங்கில் மரத்தை வீட்டில் வைத்திருந்தால் அதிர்ஸ்டம் என்கின்றனர். அதனால் அதிர்ஸ்டத்தை தேடிவாங்கி வீட்டில் வைத்து வளர்க்க தமிழ்மக்களும் ஆசைப்படுவதில் வியப்பேதும் இல்லை. எப்படியோ தாவரம் ஒன்று வீட்டில் வளர்வது மகிழ்ச்சிதான். நீரில் வளரும் இத்தாவரத்திற்கு 5செ.மீ உயரத்திற்கு நீர் தேவை. சூரிய ஒளி படுமிடத்தில் வைக்கவேண்டும். கீற்றரிற்கு பக்கத்தில் மறந்தும் வைக்க வேண்டாம். இலைகள் மஞ்சள் நிறமடைந்தால், அது ஊட்டச்சத்து இல்லாததால் ஏற்படும் நோய் என்கின்றனர். இதை தவிர்ப்பதற்கு நீருரம் வாங்கி பயன்படுத்துமாறு மேலும் அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

-Aji

# Je suis ...

## Piano



*Je* suis un piano, je viens de la famille des cordes frappées. Je suis composé de 88 touches : 52 touches blanches et 36 touches noires. Je dois être accordé une fois par an.

J'ai été crée par l'italien Bartolomeo Cristofori, à Florence entre la fin du XVIIème siècle et le début du XVIIIème siècle. J'ai ensuite subi des transformations. Après m'avoir montré à Johann Sebastien Bach (31 mars 1685- 28 juillet 1750) qui ne m'apprécia pas en 1730, on me perfectionna un peu plus pour qu'il m'approuve en 1747.Haydn, Beethoven, Chopin, Liszt et d'autres ont également composé des morceaux pour moi.

De 1790 à 1890, pendant donc un siècle, je vais endurer plusieurs changements. Jusqu'à aujourd'hui je n'ai pas reçu de grandes transformations.

**- Maya, Blanc-Mesnil (3ème)**

## Violon

*Je* suis un violon, je suis le plus petit et ayant le son le plus aigüe de ma famille : les cordes frottées. Je comporte quatre cordes que l'on peut frotter avec un archet ou que l'on peut pincer avec un index (en pizzicato).



Ma première forme d'existence fut en Inde au XIIème siècle.

Mais on dit que je suis né 1520, à Milan. On ne sait pas vraiment qui m'a crée. Le rebec, la vièle et la lira da braccio sont comme qui dirait mes parents. Ma première apparition est due à Gaudenzio Ferrari en 1529-30 dans l'église Saint-Christophe de Verceil. Je n'ai pas perdu beaucoup de temps pour me faire entendre dans toute l'Europe comme instrument de rue et instrument de noble.

On m'utilisa beaucoup pour les danses, les bals,les ballets,...

Je suis un instrument très connu et beaucoup de grands compositeurs m'ont utilisé.

**- Mehala, Blanc-Mesnil (3ème)**

## La Batterie

Je suis un ensemble de fûts, cymbales, appartenant à la famille des percussions utilisé dans la plupart des genres musicaux actuels pour marquer le rythme. Je fais partie de la section rythmique d'un orchestre ou d'un groupe de musique

Je suis arrivé au début de XXème siècle. Mon apparition est liée à la naissance du jazz, ainsi qu'aux différentes évolutions technologiques du début du XXème siècle.

Voici les principaux éléments qui me composent: la caisse claire (vers 1850) et la grosse caisse (XVIIesiècle) sont d'origine européenne. Les cymbales sont issues d'Orient et sont des instruments les plus anciens du monde.

Avec l'évolution du style de la Nouvelle-Orléans, j'ai connu mon





véritable développement, surtout grâce à des batteurs comme Zutty Singleton. Depuis, je me suis beaucoup complexifiée. On utilise également des baguettes de bois ou en métal sur moi pour recouvrir différentes formes.

**Sharukesh - M** (16ans)

## Flûte traversière



Je suis une flûte traversière : je suis un instrument à vent appartenant à la famille des bois. Je ne comprend qu'un seul tuyau. Je suis joué de manière latérale par rapport au flûtiste: on me tient sur la droite et horizontalement. Je suis composé de trois parties séparables:

- une tête(ou embouchure):plaque percée d'un trou ovale dans lequel on souffle pour produire le son.

- un corps qui porte des clés actionnées par les doigts: elles servent à boucher les trous afin de produire les différentes notes.

- une patte qui prolonge le corps principal: elle porte plusieurs clés et peut être en ut ou en si.

Je suis d'origine orientale, j'apparus en Occident au Moyen -Age (XII$^{e}$s.) mais mes premières descriptions datent du XVIème siècle où l'on m'appellait «flûte allemand». Dans la seconde moitié du XVII$^{e}$ siècle, Jean-Baptiste Lully m'introduit dans l'orchestre d'opéra et à partir du XVIIIème, je me vois assigner une fonction de soliste grâce à ma sonorité translucide et de mon agilité.

J'ai en effet subi de nombreuses transformations.

J'ai connu, durant mon histoire, une succession de périodes de succès et de méfiance, jusqu'au XIXème siècle où j'ai été revalorisée dans l'esprit des musiciens et du public.

**Vaishnavi - S**
Blanc-Mesnil (3$^{ème}$)



நிலா

**Je suis Nila. Si vous êtes collégiens, j'aimerais que cette page soit remplie avec des articles. Poèmes, histoires, blagues...etc: Ce que vous voulez mais à environ 10 lignes! Envoyez les moi** *(avec votre photo si vous le souhaitez)* **au nila_news@yahoo.fr Merci**

## சிரிக்கும் சிவப்புப்பசு 90 வயதைக் கொண்டாடுகிறது





குழந்தைகளுக்கு மாத்திரமன்றி பெரியவர்களுக்கும் மிகவிருப்பமான "முக்கோண வடிவ வெள்ளை நிற மென்மையான சுவையான" பசுப்பாற்கட்டி – La Vache qui rit தன் தொண்ணூறாவது வயதைக் கொண்டாடி மகிழ்கிறது. சிரிக்கும் ஒரு சிவப்புப்பசுவைக் கொண்ட வட்டமான பெட்டியில் அலுமினியத்தாளால் சுற்றப்பட்ட, 1921 ஆம் ஆண்டில் முதன்முதல் செய்யப்பட்ட இப்பாற்கட்டி ஐந்து கண்டங்களில் உள்ள 120 நாடுகளில் மிகப்பிரபல்யம் பெற்றது. இதன் வட்டவடிவப் பெட்டியில் நாடுகளைப் பொறுத்து மொழிகள் மாறுபட்டாலும், அதே சிரிக்கும் சிவப்புப்பசுவின் படம் மட்டும் மாறாமல் இருக்கும்.

பிரான்ஸ், அமெரிக்கா, ஸ்பெயன், அல்ஜீரியா, மொரொக்கோ, எகிப்து, சிரியா, துருக்கி, போலந்து, வியட்நாம், ரஷ்யா ஆகிய நாடுகளில் அதிகம் உட்கொள்ளப்படுகிறது. குறிப்பாக தாய்த்தொழிற்சாலை உள்ள பிரான்சில், La Vache qui rit எனவும், இஸ்பெயினில், vaca que rie எனவும், அமெரிக்காவில் The laughing Cow எனவும், வியட்நாமில் Con bo cuoi எனவும் நாமங்கள் கொண்டுள்ளது. சுவைதரும் இப்பாற்கட்டி தினமும் பத்து மில்லியன்கள் வாய்க்குள் வைக்கப்படுகின்றன என ஜூரா நகரில் அமைந்துள்ள L' entreprise Bel நிறுவனம் கூறுகிறது.

## அகராதிப்பணியில் முதலில் ஈடுபட்ட தமிழர்கள் ஈழத்து அகராதியியலாளர்களே !

யாழ்ப்பாணத்தில் பணியாற்றிய மெதடிஷ்த், அங்கிலிக்கன், அமெரிக்கன் மிஷனரிமார் தமிழ் - தமிழ் அகராதியையும், தமிழ் - தமிழ்- ஆங்கிலம் அகராதியையும் உருவாக்க முயன்றனர். ரோட்லரின் (J.P.Rottler) அகராதி வெளிவந்த பின்னரும் அவர்கள் ஊக்கம் குன்றாது இப்பணியில் ஈடுபட்டனர். ரோட்லரின் அகராதி இந்திய உபகண்டத்தின் தமிழையே கொண்டிருந்தது.யாழ்ப்பாணத்துத்தமிழைச் சேர்க்கவில்லை என மைரன் வின்ஸ்லோ தாம் தொகுத்த அகராதியில் குறிப்பிட்டுள்ளார்.



யாழ்ப்பாணத்திலே முதல் முதல் அகராதிப் பணியில் 1812ஆம் ஆண்டிலிருந்து ஈடுபட்டவர் ஜோசப் நைற் என்ற அங்கிலிக்கன் மதபோதகர் ஆகும். இவருக்கு வட்டுக்கோட்டை மிஷனரி தமிழாசிரியரான காபிரியேல் திசெரா, உடுவில் சந்திரசேகர பண்டிதர், இருபாலை சேனாதிராஜா முதலியார், மெதடிஷ்ற் மிஷன் பீற்றர் பேர்சிவல், அமெரிக்க மிஷனரி லீவை ஸ்போல்டிங் ஆகியோர் துணைபுரிந்தார்கள். இந்த அகராதி 1842 இல் லீவை ஸ்போல்டிங்கால் மானிப்பாய் அமெரிக்கன் மிஷனரி அச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டது. இதுவே பின்னாளில் மானிப்பாய் அகராதி, யாழ்ப்பாண அகராதி என வழங்கப்பட்டது. இதுவே அகரவரிசையில் சொற்கள் அமைக்கப்பட்ட அகராதி.

# தேன்கூடு

பேராசிரியர் ச. சச்சிதானந்தம்

## பதிவுகள்

Les bons comptes font les bons amis.
சரியான கணக்கு நல்ல நண்பர்களை உருவாக்குகிறது.



## உலக அழகுராணி ஆபிரிக்க பேரழகியின் கிரீடம் தில்லுமுல்லினால் பறிக்கப்படுமா !

2011 க்கான உலக அழகுராணிப் போட்டி செப்ரெம்பர் 12 அன்று பிரேசிலில் நடந்தது. உலகநாடுகளிலிருந்து பல பேரழகிகள் பங்கெடுத்த கடும்போட்டியில் கால்நூற்றாண்டு வயதுடைய, 1.79 மீற்றர் உயரமுடைய ஆபிரிக்கக் கண்டத்து அங்கோல நாட்டழகி லெய்லா லோபெஸ் உலக அழகுராணியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு அடுத்த பேரழகிகளாக முறையே உக்ரெய்ன் அழகுராணி, பிரேசில் அழகுராணி, பிலிப்பைனஸ் அழகுராணி, சீன அழகுராணிகள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். ஆபிரிக்காவில் உள்ள கப்வேர் நாட்டுப்பெற்றோர்களுக்கு மகளாகப் பிறந்த லெய்லா, அங்கோலாவில் வளர்ந்து பெரியவளானாள். பின்னர் இலண்டனுக்கு வணிக மேலாண்மை பட்டப்படிப்புக்காக வந்தார்.

**அண்ணாமலை பல்கலைக் கழகம்**

**முன்னேற்றம் உறுதி! Progrès assuré!**

1.RÉUSSISSEZ VOS PRÉPAS

எஞ்சினியர் ~ டாக்டர் ~ மருந்தாளர்

École d'Ingénieurs - Médecine – Pharmacie

பிரான்சில் மேற்படி பட்டப்படிப்புக்களுக்குரிய பாடங்களை திறமையான பிரெஞ்சுப் பேராசிரியர்கள் கொண்டு முறையாக வழிகாட்டியும் பயிற்சிப்படுத்தியும் எஞ்சினியர், மருத்துவர், மருந்தாளர் ஆகியவற்றின் போட்டிப்பரீட்சைகளுக்குத் தயார் படுத்தியும் சித்தி பெற துணைபுரிகிறோம்.

OBJECTIFS:
- Organiser le travail.
- Surmonter les problèmes méthodologiques.
- Affronter l'épreuve, concours ou examen, avec motivation et confiance.

2. SOUTIEN SCOLAIRE டியூசன் வகுப்புகள்

ÉCOLE : GS, CP, CE1, CE2, CM1, CM2, CLIN...
COLLÈGE : 6e, 5e, 4e, 3e, SEGPA...
LYCÉE : Seconde, Premiére, Terminale, BTS...
BAC : S,ES,L, STI, STAV,ST2S, STL,STG. ... Pro.
அனைத்துப்பாடங்களும் பிரெஞ்சு ஆசிரியர்கள் Toutes les matières scolaires

**Sachchi Education ( Annamalai University)**
70, rue Philippe Girard - 75018 Paris Tél. : 01 46 07 16 00 / 01 60 28 39 12

அங்கு 2010 இல் நடைபெற்ற பிரித்தானிய அங்கோலிய அழகுராணிப் போட்டியில் பங்கெடுத்த போது பலத்த எதிர்ப்புக்கள் ஏற்பட்டன. அங்கோலா அழகுராணிப்போட்டியில் கலந்து கொண்டு அழகுராணிக் கிரீடத்தைப் பெற்றார். 2010 ஒக்ரோபரில் அங்கோலா நாட்டில் இடம்பெற்ற அங்கோலா அழகுராணிப்போட்டியில் பேரழகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவ்வாறாக வெவ்வேறு அழகுராணிப்போட்டிகளில் வேறுபட்ட ஆவணங்களைக் காட்டி, போட்டிகளில் கலந்து கொண்டதனாலேயே இவர் இப்போது பெற்ற உலக அழகுராணிக் கிரீடத்திற்கு ஆபத்து இருப்பதாகப பல பத்திரிகைகள் ஆர்ஜென்டினா தொட்டு பிரான்ஸ் வரை செய்திகள் வருகின்றன.


## வீதியில் 165,000 ஆசிரியர்கள் போராட்டம்




விடுமுறை விட்டு பாடசாலைகள் திறந்து மூன்று வாரங்கள் தான் ஆகிற நிலையில், 165,000க்கும் மேற்பட்ட பாடசாலை ஆசிரியர்கள் பிரான்சின் வீதிகளில் இறங்கி அரசுக்கெதிராகப் போராட்டம் நடாத்தியிருக்கிறார்கள். அரசாங்க, தனியார் பாடசாலை ஆசிரியர்களில் பல ஆண்பாலாசிரியர்கள் திறந்த மேனியாகவும், ஆசிரியைகள் மேல்உள்ளாடைகளுடனும் முகத்தை முகமூடியால் மறைத்துக்கொண்டு **"அழிந்து போகும் கட்டத்தில் ஆசிரியத்தொழில்", "ஆபத்தில் ஆசிரியர்கள்"** எனும் வாசகங்கள் கொண்ட சுலோகங்களைத் தாங்கி, ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடாத்தி முடித்திருக்கிறார்கள்.

2012ஆம் ஆண்டில் இப்போது பணியிலுள்ள வாத்தியார்களில் 14000 பேர்கள் பணிநிறுத்தம் செய்யப்பட இருப்பதைக் கண்டித்தே ஆசிரியர் சங்கங்கள் சேர்ந்து அரசாங்கத்திற்கு எதிரான எதிர்ப்புணர்வைக் காட்டியிருக்கிறார்கள். ஆனால் இவ்வெதிர்ப்புப் போராட்டத்தினால், ஆசிரியர்களை பதவிநீக்கம் செய்யும் தன் திட்டத்தைக் கைவிடப் போவதில்லை என கல்வியமைச்சர் தெரிவித்திருக்கிறார்.

## பிரான்சில் உயர்கல்வியில் மாணவிகளே அதிகம்




பிரான்ஸ் நாட்டில் உயர்கல்வியை மேற்கொள்வதில் பையன்களிலும் பார்க்க பெண்களே எண்ணிக்கையில் முன்னிலை வகிக்கிறார்கள். 1960 - 1961 கல்வியாண்டில் 42.8% மாக இருந்த நிலை ஐம்பது ஆண்டுகள் கழித்து 57% மாக உயர்ந்திருக்கிறது. உயர்கல்வியில் கலைத்துறையில் 70 வீதமானவர்கள் மாணவிகளே. விஞ்ஞானத் துறையில் 30 வீதத்திற்கு குறைவான இடத்திலேயே «வீனஸ்» கிரகத்திலிருந்து வந்தவர்கள் உள்ளனர்.

**மாணவிகளின் துறைகள்**

| | மொத்த மாணவர்கள் | மாணவிகள் வீதம் |
|---|---|---|
| இலக்கியம், மொழியியல், பொருளாதாரம், சமூகவியல் | 420 149 | 70,9 |
| மருத்துவம், பல்மருத்துவம், மருந்தாளர் | 190 866 | 61 ,9 |
| சட்டம், அரசியல் விஞ்ஞானம் | 179 125 | 64,6 |
| பொருளாதார விஞ்ஞானம், கணக்கியல் | 136 474 | 51,2 |
| அடிப்படை விஞ்ஞானம் | 180 990 | 29,8 |
| உயிரியல், புவியமைப்பியல் விஞ்ஞானம் | 69 742 | 58,9 |
| விளையாட்டுத்துறை | 32 152 | 32,3 |
| தொழில் நுட்பத்துறை | 116 223 | 39,4 |
| மொத்தம் | **1 363 750** | **56,9** |

நிலா

நிலாவினைப் பெற்றுக்கொள்ள

**சங்கீதா அச்சகம்**
39, Bld de la Chapelle - 75010 PARIS

**ரூபி அச்சகம்**
10, Rue Labat - 75018 PARIS

**CHANGE MAGENTA**
77, Bld. de Magenta - 75010 PARIS

**ASI BOUCHERIE**
195, Rue du Fbg.St.Denis - 75010 PARIS

**VANNI BOUCHERIE**
26, Rue Perdonnet - 75010 PARIS

**Sachi Education**
70, rue Philippe de Girard - 75018 PARIS

**NRS Coiffure**
5B, Ave Alexis Varagne - 95400 Villiers le Bel

**Sarl Varnisha Coiffure**
11, rue de l'Ouest - 75014 Paris

**மாலா மளிகை**
4, Place de Salengro - Garges les Gonesse

**SHAMROCK EDUCATION CENTRE**
M°: St. François Xavier (13)

**ஜீவனா சலூன்**
203, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**SAJEE Cash & Curry**
193, Rue de Fbg St.Denis (M°: La Chapelle)

**கிருஷ்ணா அச்சகம்**
73, Rue Doudeauville - 75018 Paris



**உடல்**
கலை இலக்கிய காலாண்டிதழ்
ஆசிரியர் : எம். அரிய நாயகம்
30, Rue de Tourville,
93600 Aulnay S/Bois

**திருமறைக்கலாமன்றத்தின்**
**கலைவண்ணம்**
**23.10.2011**
M°: Fort Aubervilliers

நிலாவில் விளம்பரங்கள் வரவேற்கப்படுகின்றன.
மட்டுப்படுத்தப்பட்ட விளம்பரங்களே வெளியாகும்.
தொடர்புகளுக்கு
01 44 72 08 94





"காப்பாற்று அல்லது மரணி" என்னும் விருதுவாக்கியத்தைக் கொண்ட பிரெஞ்சு தீயணைப்புபடை இந்த ஆண்டு தனது 200 ஆண்டு நிறைவினைக் கொண்டாடுகிறது.

உலகம் தோன்றிய காலத்தில் மனிதன் தீயைக் கண்டு பயந்தான். அதனால்தான் கிரேக்கர்கள் தொடக்கம் எல்லா உலக மக்களும் அக்கினியைக் கடவுளாக சித்தரித்து வணங்கினார்கள். தமிழர்கள் அக்கினிதேவன் என தீயைப் பூஜிக்கிறார்கள். பிரான்ஸில் 300 ஆண்டுகளுக்கு முன்பு அந்தந்த ஊர்களில் உள்ள சிலர், தீப்பிடிக்கும் இடங்களுக்குச் சென்று அந்தத் தீயை அணைக்க உதவுவார்கள். கீழைத்தேய நாடுகளைப் போன்றுதான் இங்கும் மக்கள் எல்லோரும் சேர்ந்து தீயின்மேல் நீரை வாரியிறைத்து அதனை அணைக்க முயன்றனர். 1880 யூலை மாதம் முதலாம் திகதி ஆஸ்திரிய பேரரசின் கொண்டாட்டம் ஒன்றில் இடம்பெற்ற தீ விபத்தில் பலர் தீயில் கருகி மாண்டனர். இந்த நிகழ்வின் பின் தீயணைப்பு வீரர்களை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் மன்னருக்கு ஏற்பட்டது. பிரான்ஸில் தீயணைப்புப்படை ஆரம்பிக்கப்பட்டு 200 வருடங்கள் பூர்த்தியடைகின்றது. 1811 செப்ரெம்பர் 18ம் திகதி மன்னர் நெப்போலியன் பொனபாட்டினால் இப்படை உருவாக்கப்பட்டது. ஆரம்பத்தில் தன்னார்வத்தொண்டாக ஆரம்பிக்கப்பட்ட தீயணைப்புப்படை இப்பொழுது தொழில் சார்ந்த படையாக உருவாக்கப்பட்டாலும் இப்போதும் தன்னார்வலர்கள் இருக்கவே செய்கின்றனர். 1816 முதல் இந்த வீரர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. உடற்பயிற்சி முதல் பயனுள்ள வேறு தீவிர பயிற்சிகளும் வழங்கப்படுகிறது. உலகத்தில் ஏற்பட்டு வருகின்ற விஞ்ஞான, இயந்திர மாற்றங்களுக்கேற்ப தீயணைப்புப்படையிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. ஆரம்பத்தில் தீயணைப்பு வண்டியை கையினால் இழுத்தார்கள். பின் குதிரையைப் பூட்டி இழுக்க வைத்தார்கள். இன்று மோட்டார் கொண்டு இயக்குகின்றனர். அதுமட்டுமல்லாமல் 1880 முதல் வீதிகளின் அருகிலுள்ள நடைபாதைகளில் சிவப்பு நிறத்தில் தீ மலர் (Incendie Fleurissent) உருவாக்கியுள்ளார்கள். இதனைவிட மிகப் பெரிய பரிணாம வளர்ச்சியாக 1945 முதல் தீயணைப்புப்படை வீரர்கள் முதலுதவி சிகிச்சை வீரர்களாக பயிற்சி கொடுக்கப்பட்டு வருகிறார்கள். இன்று இந்த வீரர்கள் மக்களுக்காகவே வாழ்கிறார்கள். மக்களின் வாழ்வில் ஏற்படும் அன்றாட பிரச்சனைகளுக்கு இவர்களின் உதவியே தேவைப்படுகிறது. 80வீத செயல்பாடுகள் இதுவாகவே இருக்கின்றது. பிரான்ஸில் 250,000 வீரர்கள் உள்ளனர். இவர்களில் 80 வீதமானவர்கள் தொண்டர்களாகவும் 15 வீதமானவர்கள் தொழில் ரீதியாகவும் செயல்படுகிறார்கள். இதில் இணைவதற்கு குறைந்தபட்சம் 29 வயதினைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். பாரிஸில் அதனைச் சுற்றியும் மட்டும் 74 தீயணைப்பு நிலையங்கள் உண்டு. இதில் 8500 வீரர்கள் சேவை செய்கின்றனர். இந்த வீரர்களுக்கு ஒவ்வொரு 8 செக்கன்களுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வீதம் நாளொன்றிற்கு 9900 அழைப்புக்கள் கிடைக்கின்றன. எமது உடலில் ஏற்படுகின்ற உபாதைகள் முதல் வீதியில் ஏற்படுகின்ற விபத்துக்கள் வரை இவர்கள்தான் மக்களுக்கு உதவுகிறார்கள். தீயணைப்பு வீரர்களாக உருவாகியவர்கள் இன்று வாழ்வின் வீரர்களாக மாறியுள்ளார்கள். 200வது ஆண்டு விழாவைக் கொண்டாடும் அவர்களை வாழ்த்துவதற்கு நமக்கும் ஏன் தயக்கம் !

- வரதன்

**நீங்கள் ஒரு வாய்ப்பைத் தவறவிட்டால்**
**உங்கள் விழிகளைக்**
**கண்ணீரால் நிரப்பாதீர்கள்!**
**உங்கள் கண்ணீர்,**
**உங்கள் முன் உள்ள**
**இன்னொரு வாய்ப்பை மறைத்துவிடும்!**
**அழகிய புன்னகையுடன்**
**எல்லாவற்றையும்**
**எதிர்கொள்ளுங்கள்!**







லாச்சப்பலில்


சங்கீதா அச்சகம்

இலங்கை, இந்திய விலைகளில் அழைப்பிதழ்கள் !

திருமண, பிறந்தநாள், பூப்புனித நீராட்டுவிழா அழைப்பிதழ்கள்,
வர்த்தக விளம்பரங்கள் மற்றும் சகலவிதமான
அச்சுப்பதிப்பு வேலைகளுக்கும் நாடுங்கள்!

Tél./Fax : 01 44 72 08 94

E-mail: sangeethafrance@yahoo.com




39 Bd de la Chapelle
75010 Paris
M°: LA CHAPELLE